**பிச்சாட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள ஆரணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து உபநீர் வெளியேற்றம் குறித்து அறிக்கை.**

ஆந்திர மாநிலம், சித்தூர் மண்டலம், பிச்சாட்டூர் கிராமத்தில் ஆரணியாறு நீர்த்தேக்கம் உள்ளது. இந்த நீர்த்தேக்கத்தில் நீரமட்டம் உயர்ந்து வருகிறது. நீர்தேக்கத்தின் முழுநீர் மட்ட அளவு (+) 281 அடி இன்று (28.11.21) மாலை 5.00 மணியளவில் நீர்ததேக்கத்தின் நீர் மட்ட அளவு (+) 278.30 அடி.

நீரத்தேக்கத்திற்கு வரும் உபரிநீரை அணையின் பாதுகாப்பு கருதி ஆந்திர மாநில அரசு இன்று 28.11.21 அதிகப்படியான 3000 கனஅடி உபரி நீரை திறந்து விடப்பட்டுள்ளதால் வெள்ள அபாய முன்னெச்சரிக்கை விடப்படுகிறது.

மேற்கண்ட வெள்ள நீரை ஆரணியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகள் மற்றும் தடுப்பணைகள் மூலம் தேக்கப்பட்டு ஏரிகளுக்கு வரத்து கால்வாய் மூலம் பாசனத்திற்காக நீர் சேகரித்து அனுப்பபடுகிறது. நீர்த்தேக்கத்திற்க்கு மழை நீரினால் வரத்து அதிகமாகும் பட்சத்தில் மிகை நீர் வெளியேறத்தின் அளவு படிப்படியாக உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, ஆரணியாற்றின் கரையோர கிராமங்களான ஊத்துக்கோட்டை தாராட்சி, பேரண்டூர், 43–பனப்பாக்கம், பாலவாக்கம், காக்கவாக்கம், செங்காத்தாகுளம், பெரியபாளையம், பாலவாக்கம், ஆர்.என்.கண்டிகை மேல்முதலம்பேடு, கீழ்முதலம்பேடு, பெருவாயல், ஏலியம்பேடு, பெரியகாவணம், சின்னகாவணம், பொன்னேரி, லட்சிமிபுரம், கம்மவார்பாளையம், பெரும்பேடு, வஞ்சிவாக்கம், பிரளயம்பாக்கம், போளாச்சியம்மன் குளம், அனந்தேரி, பேரிட்டிவாக்கம், வடதில்லை, மாம்பாக்கம், கல்பட்டு, மாளந்தூர், தொளவேடு, மேல்மாளிகைப்பட்டு, கீழ்மாளிகைப்பட்டு, ராள்ளப்பாடி, ஆரணி, போந்தவக்கம், புதுவாயல், துரை நல்லூர், வைரவன்குப்பம், வெள்ளோடை, ஆலாடு, கொளத்தூர், குமாரசிர்லபாக்கம். மனோபுரம், அத்திமாஞ்சேரி, வேலூர், ரெட்டிபாளையம், தத்தமஞ்சி, காட்டூர் கடப்பாக்கம், சிறுபழவேற்காடு, ஆண்டார் மடம், தாங்கள் பெரும்புலம் மற்றும் ஆரணியாற்றின் இருபுறம் உள்ள தாழ்வான பகுதிகளில் இருப்பவர்கள் பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுகொள்ளப்படுகிறது.

28/11/21